## அன்பகம்



இது தூய பேனா நட்பு வேண்டி தம்முடைய இதயத்தை திறப்பவர் களுக்கான பகுதி.

வை. சுப்பிரமணியன்,
33, கடைவீதி,
பெத்தநாயக்கன் பாளையம்,
ஆத்தூர் வட்டம்
சேலம் மாவட்டம் - 636 109.

சினேகமணியன்,
இந்தியன் வங்கி கட்டிடம்,
இரண்டாவது மாடி,
எடப்பாடி,
சேலம் - 637 101

எம்.மாறன்,
35, சவுரி தெரு,
ஆலந்தூர்,
சென்னை - 600 016.

என். சுப்ரமணியன்.,
நெஞ்சத்தூர்,
மேலசேத்தூர்,
இளையான்குடி,
சிவகங்கை - 630 709.

கே.மணி,
137, வேலாயுதசாமி காம்ப்ளக்ஸ்,
முத்தூர் ரோடு,
வெள்ளக்கோவில்,
ஈரோடு மாவட்டம் - 638 111

பி.பாலாஜிகணேஷ்,
10,11, இராஜேந்திராகார்டன்,
சிவபுரி மெயின் ரோடு,
அண்ணாமலைநகர் - 608 00

ஆர்.ராஜ்குமாரன்,
மாரம்பாளையம்,
காராப்பாடி,
பு.புளியம்பட்டி - 638 45
ஈரோடு மாவட்டம்



# காற்றாய் மாறிவிடு

## சென்ற இதழின் கதைச்சுருக்கம்

குமரவேல்!

ஒரு பட்டதாரி இளைஞன்.

அம்மா ராஜாத்தியோடு ஒரு தொழிற் சாலையில் ஷிப்ட் ட்யூட்டி பார்க்கும் ஊழியனாக அவனது காலம் சென்று கொண்டிருந்தது. ஒரே அக்கா பத்மினிக்கு திருமணம் ஆகிவிட்டது. மாறன் என்கிற மிலிட்டரிக் காரருக்கு திருமணம் செய்து கொடுத்து அனுப்பி விட்டனர். அவள் இப்பொழுது ராஜஸ்தானில் ஏதோ ஒரு ஊரில் கணவனுடன் மிலிட்டரி கேம்ப்பிலேயே வசித்து வருகிறாள். கல்யாணம் ஆகி பல வருடங்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை.

அப்பா ராஜாரத்னம், குமரவேல் சிறுவனாக இருக்கும்போதே காணாமல் போய் விட்டார். அவரும் குமரவேலுவின் அம்மாவும் காசிக்கு போய்விட்டுத் திரும்பும்போது ஒரு ரயில்வேஸ்டேஷனில் குடிக்க தண்ணீர் கொண்டு வருவதாகச் சொல்லிக் கொண்டு சென்றவர்தான்.. கிட்டத்தட்ட இருபது வருடங்கள் ஓடிவிட்டது. உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்றே தெரியாத நிலை. இருப்பினும் அவர் உயிரோடு இருப்பதாகவே நம்பிக் கொண்டிருக்கிறாள் ராஜாத்தி.

இந்நிலையில், ஒரு நாள் குமரவேலோடு காலேஜில் படித்த யானைமலை அரசகுடும்பத்தைச் சேர்ந்த கருணாகரவர்மன் என்பவன் தனக்கு திருமணம் என்று பத்திரிகை கொடுத்து விட்டுச் செல்கிறான்.

யானைமலை ஜமீன் ஒரு காலத்தில் மிகச் செல்வாக்காக இருந்த சமஸ்தானம். இன்றும் ஏராளமான சொத்துபத்துக்கள் உள்ளன. ஆனாலும் அந்த சமஸ்தானத்தில் நிறைய மர்மங்கள், புரியாத புதிர்கள் இருப்பதாக ஊரார் நினைக்கின்றனர்.

**இந்திரா செளந்தர்ராஜன்**

இந்நிலையில் குமரவேலுவின் வீட்டிற்கு வரும் ஒரு குடுகுடுப்பைக்காரன், அவன் வீட்டிற்கு எச்சரிக்கை செய்கிறான். அதற்கு ஏற்ப அவனைப் பார்க்க வரும் சிவசாமி என்பவர் குமரவேலை, ஜமீன் திருமணத்திற்கு போகாதே - அங்கே போகும் பலர் உயிரோடு திரும்புவதில்லை என்கிறார்.

குமரவேலின் தாய் ராஜாத்தி இதை எல்லாம் கேட்டு பயப்படுகிறாள். ஒரே மகனும் ஒரே ஆதரவுமான குமரவேலை 'நீ எந்த திருமணத்திற்கும் போகாதே' என்றும் தடுக்கிறாள்.

குமரவேல் எல்லாவற்றையும் கேட்டு சற்று குழம்புகிறான். எல்லாமே ஒரு வேளை மூட நம்பிக்கையாக இருக்குமோ என்றும் நினைக்கிறான்.

இந்நிலையில் ஊரில் உள்ள பார்க்கிற்கு ஓய்வெடுக்கச் செல்பவன் கையில் நண்பன் ஒருவன் மூலம் பழைய புத்தகம் ஒன்று கிடைக்கிறது.

பிரசன்ன ஜாலம் என்னும் அந்த புத்தகம், போன நூற்றாண்டில் அச்சிடப்பட்ட மிக பழைமையான புத்தகம். அதில் ஜோதிடம், பிரசன்னம் தொடர்பான தகவல்கள் நிறைய இருக்கின்றன. ஸ்ரீஸ்ரீஸ்ரீதரராகவன் என்பவர் எழுதியதாக அச்சிடப்பட்டிருக்கும் அப்புத்தகம் காகபுஜண்டர் என்னும் மகாமுனிவர் கனவில் வந்து சொன்னதை வைத்து எழுதியது என்று ஒரு குறிப்பும் அதில் இருக்கிறது.

அதில் உள்ள ஜோதிடக் குறிப்பை விளையாட்டாக பரீட்சை செய்து பார்க்கும் குமரவேல் பின் அந்த புத்தகத்தில் வந்த குறிப்புப்படியே சம்பவங்கள் நடப்பதைப் பார்த்து அதிசயித்துப் போகிறான். வீட்டுக்கு வருபவன் அம்மாவிடம் கூற, அவளும் அதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறாள். அந்தப் புத்தகத்தின் மேல் காக்கை ஒன்றும் வந்து அமர்ந்து விட்டுச் செல்கிறது.

இதெல்லாம் தற்செயலாகவும் அமானுஷ்யமாகவும் தெரிகிறது. இந்நிலையில் 'காணாமல் போன அப்பா உயிரோடு இருக்கிறாரா.. அவர் திரும்பி வருவாரா' என்கிற ஒரு பிரதான கேள்வியை அந்த புத்தகத்தை வைத்துக் கொண்டு எழுப்ப, அதற்கு 'அவன் அப்பா வருவார்' என்று கூறுகிறது அந்த புத்தகம். அதேபோல அவன் அப்பாவும் அன்றே அந்த வீட்டுக்கு அவர்களைத் தேடிக் கொண்டு வந்து சேருகிறார்.

காசி யாத்திரையில் தண்ணீர் கொண்டு வரச் சென்ற சமயம் தண்டவாளத்தில் விழுந்து தலையில் அடிபட்டு சுயநினைவு போய் விட்டதாகவும் ரிஷிகேஷ் பக்கம் ஆசிரமம் அமைத்துள்ள சாமியார் ஒருவர் தன்னை கூட்டிச் சென்று ஆதரித்து காப்பாற்றியதாகவும், ஒரு பத்து நாட்களுக்கு முன்புதான் சுயநினைவு திரும்பியதாகவும் கூறுபவர், உடனே ஊருக்குத் திரும்பி வந்துவிட்டதையும் சொல்லி அவர்களை ஆச்சரியப் படுத்துகிறார்.

அதேசமயம் ரிஷிகேஷ் ஆஸ்ரமத்தில் அவர் சித்தக்கலக்கத்துடன் இருந்த நிலையிலும் செய்த சிறுசிறு சேவைக்காக மகிழ்ந்து குருநாதர், 'காகபுஜண்டர் ஒரு புத்தகமாகவே உன் குடும்பத்துக்கு வந்து சேருவார்' என்றும் கூற.. குமரவேல் அந்த புத்தகம் வந்து விட்டதாக கூறி ஆச்சரியப்படுகிறான்.

அப்போது அவரும் அது ஒரு அற்புதமான விஷயம்.. காகபுஜண்டர் போன்ற முனிவர்களின் ஆற்றலை நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்றும் கூறுகிறார்.

இந்நிலையில் திரும்பவரும் குடுகுடுப்பைக்காரன் முன்பு சொன்னதற்கு நேர் எதிர் பலனைக் கூறி, குமரவேலுக்கு சில தினங்களில் திருமணம் நடக்கும் என்றும், வரப்போகும் பெண் அரச குடும்பத்தவள் என்றும் கூறிச் செல்கிறான்.

குமரவேலுக்கு ஒவ்வொரு செயலும் ஆச்சரியம் தருகிறது.

இடையில் நண்பன் கருணாகரவர்மன் திருமண தினமும் வர திருமணத்திற்கு செல்கிறான். முன்பு போக வேண்டாம் என்று கூறிய அவன் தாய் ராஜாத்தியும் இந்த முறை தடுக்கவில்லை.

திருமணத்திற்காக யானைமலை செல்பவன் பிரசன்ன ஜால புத்தகத்தையும் எடுத்துச் செல்கிறான். சென்ற இடத்தில் அவனுக்கு ஒரு அதிர்ச்சியான தகவல் காத்திருக்கிறது.

அதாவது மணமகன் கருணாகரவர்மன் திருமணத்தை ஒட்டி செய்ய வேண்டிய அவர்கள் குல

தெய்வ வழிபாட்டுக்காக யானைமலையின் அடர்ந்த காட்டுக்குச் சென்றபோது காணாமல் போய் விட்டான் என்று தெரிகிறது. குமரவேல் அதிர்ச்சியடைகிறான்.

வீடு தேடி வந்து சிவசாமி சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. அத்துடன் கருணாகரவர்மன் சார்ந்த யானைமலை ஜமீன் பற்றி பலதகவல்கள் அவனுக்கு தெரிய வருகிறது.

கருணாகரவர்மனின் ஜமீன் ஒரு சாபத்திற்கு உள்ளான ஜமீன். அங்குள்ள அரசின் வாரிசுகள் விதவைப் பெண்களையே திருமணம் செய்ய வேண்டும். வேறு பெண்களை திருமணம் செய்தால் விபரீதம் ஏற்படும்.

கருணாகரவர்மனின் அப்பா நாராயணவர்மாவும் வேணுமதி நாச்சி என்னும் விதவையை மணம் புரிந்து அவளுக்குப் பிறந்தவனே கருணாகரவர்மன்.

ஆனால், கருணாகரவர்மன் ஜமீன்சாபம், குலதெய்வ வழிபாடு இவைகளில் நம்பிக்கை இல்லாத விஞ்ஞான பார்வை உடைய ஒருவன்.

இருந்தும், காந்தமலை ஜமீனில் நிலா என்னும் நித்யமாலினி திருமணமான முதல்நாளே கணவனை இழந்தவள். அப்படிப்பட்டவளுக்கு வாழ்க்கை தருவதை முற்போக்காக கருதி சம்மதிக்கிறான்.

திருமண ஏற்பாடுகளும் நடக்கின்றன.

இந்நிலையில் திருமணத்திற்கு முதல்நாள் அவர்களின் குலதெய்வமான கோட்டைச்சாமியை வணங்க அவனும் அவன் தாய் தந்தையான நாராயண வர்மாவும், வேணுமதி நாச்சியும், அரண்மனை கார்வாரான திருநாவுக்கரசும், அரண்மனைத் திருமணங்களை நடத்தித்தரும் பொறுப்பில் உள்ள கொளஞ்சியப்பரும் சேர்ந்து காட்டுக்குச் செல்கின்றனர்.

'சரி.. ஏதோ தேங்காய்பழம் உடைத்து செய்யும் பூஜையாக இருக்கும். தலையைக் காட்டிவிட்டு வருவோம்' என்று சாதாரணமாக கருதி செல்லும் கருணாகரவர்மன் அங்கு சென்ற பிறகு அதிர்ச்சியடைகிறான்.

காரணம், அங்கே பலியிடுவதற்காக ஒரு புலியை பிடித்து வைத்திருக்கின்றனர். அதை அறுத்து அதன்



ரத்தத்தால் கோட்டைச்சாமிக்கு அபிஷேகம் செய்வது தான் பூஜையின் முக்கிய ஐதீகம்.

'இது அநியாயம்.. ஒரு வாயில்லா ஜீவனை பலியிட மாட்டேன்' என்று மறுத்து அந்த புலியையும் காட்டுக்குள் தப்பிக்கவிடும் கருணாகரவர்மன் வேகமாக அங்கிருந்து பாதி பூஜையிலேயே திரும்புகிறான்.

அந்த காட்டில் சாமியார் ஓடை என்று ஒரு ஓடையும், சாமியார் ஒருவரும் வாழ்ந்து வருவதாக நம்பப்படுகிறது. வழியில் அவரைப் பார்க்கிறான். அவர், அவனை அங்கு தன்னோடு வா என அழைத்துச் செல்கிறார். அப்படியே சாதாரணமாக தண்ணீரின் மேலும் நடந்து செல்கிறார். அதிசயிக்கிறான் கருணாகரவர்மன். அவரை பின் தொடர்கிறான்.

பூஜை முடிந்து திரும்பிவரும் ராஜா நாராயணவர்மா, ராணி வேணுமதிநாச்சி, கார்வார் திருநாவுக்கரசு என்று அவ்வளவு பேரும் கருணாகரவர்மனைக் காணாமல் திகைக்க, அவனது திருமணம் தடைபட்டு நிற்கிறது. ஊர்முழுக்க அவன் காணாமல் போனதே பேச்சாகவும் இருக்கிறது.

இந்நிலையில்தான் திருமண வீட்டிற்கு வரும் குமரவேல் கருணாகரவர்மன் காணாமல் போனது அறிந்து அதிர்ச்சியடைகிறான். அங்கே வரும் வயதான பெரியவர் ஒருவர் போலீஸை வைத்துக்கொண்டு காட்டில் அவனைத்தேடி கண்டு பிடிப்பதைவிட இந்த ஊரில் பைத்தியமாக சுற்றிக் கொண்டிருக்கும் காக்காச்சாமி என்பவனிடம் ஒரு புத்தகம் உள்ளது. அதற்கு பெயர் பிரசன்னஜாலம் என்பதாகும். அதில் நாம் கேட்கும் கேள்விகளுக்கு விடையை காகபுஜண்டரே எழுத்து மூலம் கூறுவார். அந்த புத்தகம் ஒரு அற்புதம் என்கிறார்.

திகைக்கிறான்.

அந்தப் புத்தகம்தான் அவனிடம் இருக்கிறதே.. எந்த காக்காச்சாமியை பெரியவர் குறிப்பிட்டாரோ அவர் மூலமாகத்தான் பார்க்குக்கு ஓய்வெடுக்கச் சென்றபோது அது அவன் வசப்பட்டது. ஆக கையில் வெண்ணையை வைத்துக் கொண்டா நெய்க்கு அலைவது?

உடனேயே ரகசியமாக ஒதுங்கி புத்தகத்தை திறந்து நண்பன் என்ன ஆனான் என்கிற கேள்விக்கு சக்கரத்தில் விடை தேடுகிறான்.

'அவன் உயிருடன் காட்டில் உள்ளான். காட்டில் உள்ள ஏரியில் இருக்கும் ஆமை முதுகு போன்ற பாறை மேல் ஏறி நில். விடை கிடைக்கும். நீ தனியே போ' என்று பதில் வருகிறது. உடனே காட்டுப்பக்கம் அவனைத் தேடிக் கொண்டு, வன இலாகா அதிகாரி ஒருவரின் ஜீப்பில் ஏறிக்கொண்டு அந்த அடர்ந்த காட்டுக்கு புறப்படுகிறான்.

வழியில் வன இலாகா அதிகாரி அவனைப் பற்றி விசாரிக்கிறார். அப்படியே இது கருணாகரவர்மனின் அப்பா நாராயணவர்மாவின் சதிச்செயலாகக் கூட இருக்கலாம் என்று புதிர் போடுகிறார்.

எப்படி என்று கேட்கிறான் குமரவேல்.

இந்த காட்டில் அஷ்டமாசித்து அறிந்த சித்தர்கள் உள்ளனர். அத்துடன் பிரசன்னஜாலம் என்று எதிர்காலத்தைச் கூறும் புத்தகம் ஒன்றும் இங்கே சுத்திக் கொண்டிருக்கும் ஒரு கிறுக்கனிடம் உள்ளது. அவைகளை அடைய வந்த பலர் காணாமல் போயுள்ளனர். அந்த வரிசையில் இறுதியாக காணாமல் போனவன்தான் இந்த கருணாகரவர்மன்.

எங்கள் டிபார்ட்மெண்ட், ஜமீன்தார் நாராயணவர்மாவையே சந்தேகிக்கிறது. அவருக்கும் அஷ்டமா சித்துவை அடையும் விருப்பம் அதிகம். எனவே இந்த காட்டுக்கு வருபவர்களை அவர் நரபலி கொடுத்திருக்கலாம் என்று சந்தேகப்படுவதாக கூற குமரவேலுக்கு அதிர்ச்சி அதிகரிக்கிறது.

'அஷ்டமாசித்து, சித்தர்கள், நரபலி.' என்று விஷயம் எங்கெங்கோ செல்வதை உணர்பவன் அந்த அதிகாரியிடம் இருந்து நழுவி தனியேச் செல்கிறான். பிரசன்ன ஜாலப் புத்தகத்தின் பதிலில் வந்தபடி அந்த காட்டில் உள்ள ஏரியில் ஆமை முதுகு போன்ற பாறையை தேடிச் செல்கிறான். வழியில் சாமியார் ஒடை இடைமறிக்கிறது. அதில் இறங்கப்பார்க்கிறான். அதே சமயம் எதிரில்.?

**இனி...**



# காற்றாய் மாறிவிடு

## நான்காம் சக்தி

## 8



**ம**னிதன் இடம் விட்டு இடம் செல்ல முதலில் கண்டறிந்த விஷயம் ஒரு சக்கரமாகும். அதிலிருந்துதான் வண்டிகள் தோன்றின. அதன் பரிணாம வளர்ச்சியில் இன்று பெட்ரோல் டீசலில் இயங்கும் கார், பஸ்கள் வந்து விட்டன.

**இந்திரா சௌந்தர்ராஜன்**

